Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 31.07.2024 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவண குமார்**

**நாள் 31.07.2024 புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---------------------------------------------------------------------------------------------

***தலைப்புச் செய்திகள்***

புதுச்சேரி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர், துணைநிலை ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் ஆற்றிய உரையுடன் இன்று தொடங்கியது.

ஏழைகள் மற்றும் நலிவடைந்த பிரிவினரின் நலனுக்கும், சாலை, மின்சாரம், கல்வி, சுகாதாரம், வேளாண்மை உள்ளிட்ட துறைகளின் வளர்ச்சிக்கும், புதுச்சேரி அரசு முன்னுரிமை அளிப்பதாக துணைநிலை ஆளுநர் கூறினார்.

புதுச்சேரி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர், ஆகஸ்ட் 14ஆம் தேதி வரை, 11 அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

விமானங்களின் வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான, **பாரதீய வாயு-யான் விதேயக்** மசோதாவை, மத்திய அமைச்சர் திரு. கே. ராம் மோகன் நாயுடு, இன்று மக்களவையில் தாக்கல் செய்தார்.

**ஆளுநர் உரை 1 (18 )**

புதுச்சேரி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர், அவையில், துணைநிலை ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் ஆற்றிய உரையுடன்

இன்று தொடங்கியது. ஏழைகள் மற்றும் நலிவடைந்த பிரிவினரின் நலனுக்கும், சாலை, துப்புரவு, மின்சாரம், கல்வி, சுகாதாரம், வேளாண்மை உள்ளிட்ட முக்கிய துறைகளின் வளர்ச்சிக்கும், புதுச்சேரி அரசு முன்னுரிமை அளிப்பதாக துணைநிலை ஆளுநர் திரு. ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உரையில் கூறினார்.

அரசின் பல்வேறு முயற்சிகள் காரணமாக, கடந்த நிதியாண்டில், புதுச்சேரி மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 7.54 சதவிகிதமும், தனிநபர் ஆண்டு வருமானம், 2 லட்சத்து 63 ஆயிரத்து 68 ரூபாயாகவும், அதிகரித்து இருப்பதாக திரு. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்தியதற்காக, A-3 மாநிலங்களின் பட்டியலில் புதுச்சேரி முதலிடம் பெற்றுள்ளதாகவும், புதுச்சேரி அரசின் நெஞ்சக நோய் மருத்துவமனையின் இளநிலைக் குறிப்பு ஆய்வகம், தரமான சேவைகளுக்கான தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளதாகவும், அவர் கூறினார்.

புதுச்சேரியில் அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களும், மின்னணு மயமாக்கப் பட்டுள்ளதாகவும், மீனவர்களுக்கு

**ஆளுநர் உரை 2 (18 )**

மீன்பிடி தடைக்கால நிவாரணமாக 12 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளதாகவும்,அவர் தெரிவித்தார்.

புதுச்சேரியில் உள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல் நிலைப் பள்ளிகளும், கடந்த கல்வியாண்டில் சிபிஎஸ்இ பாடத்திட்டத்திற்கு மாற்றப்பட்டு இருப்பதையும், மாணவர்களின் எழுத்தறிவு மற்றும் கணித அறிவை மேம்படுத்துவதற்கான நிபுண் பாரத் திட்டம், அனைத்துப் பள்ளிகளிலும் செயல்படுத்தப் படுவதையும் துணைநிலை ஆளுநர் சுட்டிக்காட்டினார். சென்டாக் மூலம் உயர் கல்வியில் சேர்ந்த, 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகளுக்கு, பெருந்தலைவர் காமராஜர் நிதியுதவி திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதுச்சேரியில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் தொடங்க 16 தொழில் முனைவோருக்கு அனுமதி அளிக்கப்பட்டதால் 766 கோடி ரூபாய் முதலீடுகள் பெறப்பட்டுள்ளதாகவும், வேலையில்லா இளைஞர்கள் சுய தொழில் தொடங்க 238 இளைஞர்களுக்கு அரசு மானியத்துடன் கூடிய, ஒன்றரைக் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார். தகவல் தொழில்நுட்பத்தை பரவலாக்கும் வகையில், புதுச்சேரியில், 5.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இணையப் பயன்பாட்டு

**ஆளுநர் உரை 3 (19 )**

மின்-அலுவலகம் வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலிவுறு நகரத் திட்டத்தின் கீழ், வஉசி பள்ளிக்கட்டிடத்தின் புனரமைப்பு, மேட்டு வாய்க்கால்-பள்ள வாய்க்கால் இணைப்பு பாலம் உள்ளிட்ட பணிகள், 42.87 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார். புதுச்சேரி துறைமுகத்திற்கும், சென்னை துறைமுகத்திற்கும் இடையே சரக்கு போக்குவரத்து தொடக்கப்பட்டதை தொடர்ந்து, இதுவரை 9 சரக்குப் பெட்டக கப்பல்கள் புதுச்சேரி துறைமுகத்திற்கு வந்துள்ளதாக, திரு.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மகாத்மா தேசிய வேலை உத்தரவாத திட்டத்தின் கீழ், புதுச்சேரியில் கடந்த நிதியாண்டில் சுமார் 58 கோடி ரூபாய் செலவில் 466 பணிகள் முடிக்கப் பட்டுள்ளதாகவும், சுமார் 3 ஆயிரத்து 700 சுயஉதவிக் குழுக்களுக்கு சுமார் 65 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். மாநிலத்தில், அரசு கட்டிடங்கள் மற்றும் தனியார் வீடுகளில், மொத்தம் சுமார் 41 மெகாவாட் திறன் கொண்ட, மேற்கூரை சூரிய சக்தி மின்னுற்பத்தி வசதிகள் நிறுவப் பட்டுள்ளதாக, சட்டமன்ற உரையில் துணைநிலை ஆளுநர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஆளுநர் உரை 4 (15 )

முன்னதாக, சட்டமன்றத்தில் துணைநிலை ஆளுநரின் உரை தொடங்கியபோது திமுக மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று ஆளுநர் உரைக்கு எதிர்ப்பு தெரிவிக்க

முயன்றனர். உரையை முழுமையாகக் கேட்டு அதன் பின்னர் குறை இருந்தால் சுட்டிக் காட்டுங்கள் என்று துணைநிலை ஆளுநர் கேட்டுக்கொண்டதை தொடர்ந்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருக்கையில் அமர்ந்தனர். அதன் பின்னர் துணைநிலை ஆளுநர் உரையை வாசித்து முடித்தார். முன்னதாக, தமிழர் பாரம்பரிய உடையான, பட்டு வேட்டி- சட்டை அணிந்து சட்டப்பேரவைக்கு வந்த துணை நிலை ஆளுநருக்கு, காவல்துறையினர் அணிவகுப்பு மரியாதை அளித்தனர். சட்டமன்றத்தில் துணைநிலை ஆளுநரின் உரை முடிந்த பின்னர், சபாநாயகர், அவையின் அலுவல்களை, நாளை காலை வரை ஒத்தி வைத்தார். தொடர்ந்து துணை நிலை ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், ராஜ்நிவாசில் போலீஸ் மரியாதையை ஏற்றுக்கொண்டு, புதுச்சேரியில் இருந்து விடைபெற்றுச் சென்றார்.

## அலுவல் நாட்கள் (15)

புதுச்சேரியில் இன்று தொடங்கியுள்ள சட்டப்பேரவைக் கூட்டத் தொடர், ஆகஸ்ட் 14ஆம் தேதி வரை, 11 அமர்வுகளாக நடைபெறவுள்ளது. இன்று சட்டமன்ற அலுவல்கள் முடிந்த பின்னர் நடைபெற்ற, அவையின் அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டதாக, சபாநாயகர் திரு. செல்வம் தெரிவித்தார். சட்டமன்றத்தில் இன்று ஆளுநர் ஆற்றிய உரை மீதான விவாதம் நாளை

1ஆம் தேதி அவையில் இடம் பெறும் என்றும், 2ஆம் தேதி காலை 9 மணிக்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பட்ஜெட்டை தாக்கல் செய்வார் என்றும் அவர் கூறினார். ஆகஸ்ட் 5, 6 தேதிகளில் பட்ஜெட் மீதான விவாதங்களும், 7, 8, 9 ஆகிய தேதிகளில் துறை ரீதியிலான விவாதங்களும் அவையில் இடம் பெறும். உறுப்பினர்களின் விவாதங்களுக்கு, முதலமைச்சரும், அமைச்சர்களும், வரும் 12, 13 ஆகிய தேதிகளில் பதிலளிக்க உள்ளனர். ஆகஸ்ட் 14ஆம் தேதி தனிநபர் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்றும், அதைத் தொடர்ந்து அன்றைய தினமே கூட்டத்தொடர் முடிவடையும் என்றும் பேரவைத் தலைவர் தெரிவித்தார்.

விமான சட்டம் (13)

1934ஆம் ஆண்டு விமானங்கள் சட்டத்தில், அதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் கொண்டு வரப்பட்ட பல்வேறு திருத்தங்களால் ஏற்பட்ட குழப்பங்களைக் களையும் வகையில், புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள, பாரதீய வாயு-யான் விதேயக் மசோதாவை, மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. கிஞ்சராப்பு ராம் மோகன் நாயுடு, இன்று மக்களவையில் தாக்கல் செய்தார். விமானங்களின் வடிவமைப்பு, உற்பத்தி, விற்பனை, ஏற்றுமதி-இறக்குமதி, பயன்பாடு மற்றும் இயக்கத்தையும், விமானங்களின் இயக்கத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணிகளையும், முறைப்படுத்தும் வகையில் விதிமுறைகளைக் கொண்டு வர

புதிய மசோதாவில் மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. விமான விபத்துகள் பற்றிய விசாரணை குறித்து, விதிமுறைகளைக் கொண்டு வரும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கவும், மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

வயநாடு (19 )

கேரள மாநிலம் வயநாடு நிலச் சரிவுகளில் உயிரிழந்தோர் எண்ணிக்கை, 165ஆக அதிகரித்துள்ளது. சுமார் 100 பேரைக் காணவில்லை என்பதால், பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில், ராணுவம், கடற்படை, விமானப்படை தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் இதர அமைப்பினர் பெருமளவிலான தேடுதல் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். கனரக மண்வாரி இயந்திரங்கள், இன்று அதிகாலை வயநாடு வந்து சேர்ந்துள்ளன. இத்தகைய மேலும் சில இயந்திரங்கள் டெல்லியில் இருந்து கண்ணூர் விமான நிலையத்தில் வந்து இறங்கி உள்ளன. மண்ணுக்கு அடியில் புதையுண்டு கிடப்பவர்களை கண்டுபிடிக்க மோப்ப நாய்கள், பயன்படுத்தப் படுகின்றன. நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் இருந்து இதுவரை சுமார் ஆயிரம் பேர் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களில் 186 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் தங்க

வைக்கப்பட்டுள்ளனர். கேரள ஆளுநர் திரு. ஆரிஃப் முகமது கான், கோவா ஆளுநர் திரு. ஸ்ரீதரன் பிள்ளை ஆகியோர் இன்று வயநாடு சென்று, மண் சரிவு ஏற்பட்ட பகுதிகளை பார்வையிட்டனர். கேரள முதலமைச்சர் திரு.பினராய் விஜயன், நிலச்சரிவு நிலவரங்கள் குறித்து இன்று உயர்நிலைக் கூட்டம் நடத்தினார்.

**ஜார்கண்ட் ரயில் ( 7)**

ஜார்கண்டில், ஹௌரா-மும்பை ரயில் தடம் புரண்ட ரயில் பாதையில் போக்குவரத்தை சீர்படுத்தும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தடம் புரண்ட 18 ரயில் பெட்டிகளில், இதுவரை 16 பெட்டிகள் அகற்றப் பட்டுள்ளதாகவும், எல்லா பெட்டிகளும் அகற்றப்பட்ட பின்னர், ரயில் பாதை மற்றும் மின் பாதையை சரிப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெற்கு மத்திய ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**பதவியேற்பு (16)**

-ஜார்கண்ட் ஆளுநராக திரு. சந்தோஷ்குமார் கங்வார்,

-மணிப்பூர் மாநில ஆளுநராக, திரு. லக்ஷ்மண் பிரசாத் ஆச்சார்யா,

-பஞ்சாப் ஆளுநர் மற்றும் சண்டிகர் நிர்வாகியாக, திரு. குலாப் சந்த் கட்டாரியா ஆகியோர், இன்று பதவி ஏற்றுக்கொண்டனர்.

-பஞ்சாப் ராஜ்பவனில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், பஞ்சாப்-ஹரியானா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு. ஷீல் நாகு, திரு கட்டாரியா-விற்கும்,

-மணிப்பூர் ராஜ்பவனில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், மணிப்பூர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு. சித்தார்த் மிருதுள், திரு.ஆச்சார்யாவிற்கும்,

-ராஞ்சி ராஜ்பவனில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், ஜார்கண்ட் உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி திரு. சுஜித் நாராயண் பிரசாத், திரு. கங்வாருக்கும், பதவிப் பிரமாணம் செய்து வைத்தனர்.

சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

வானிலை (16 )

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்றைய தினம் தேனி, திண்டுக்கல் மற்றும் தென்காசி மாவட்ட மலைப் பகுதிகளில், கன மழைக்கும், கோவை-நீலகிரி மாவட்ட மலைப் பகுதிகளில், மிக கன

மழைக்கும் வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை, நீலகிரி, தேனீ, திண்டுக்கல், தென்காசி, திருப்பூர், நெல்லை, குமரி மாவட்டங்களில் அநேக இடங்களிலும், இதர மாவட்டங்களின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மணிக்கு 40 கிலோமீட்டர் வரையிலான வேகத்தில், வலுவான தரைக்காற்று வீசக்கூடும் என்றும், ஆகஸ்ட் 6ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழக கடலோரப் பகுதிகள், மத்திய மேற்கு-மத்திய கிழக்கு மற்றும் தெற்கு வங்கக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, கடந்து 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கோவை மாவட்டம், சின்னக்கல்லார், சின்கோனா ஆகிய இடங்களில் தலா 7 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

புதுச்சேரி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர், துணைநிலை ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் ஆற்றிய உரையுடன் இன்று தொடங்கியது.

ஏழைகள் மற்றும் நலிவடைந்த பிரிவினரின் நலனுக்கும், சாலை, மின்சாரம், கல்வி, சுகாதாரம், வேளாண்மை உள்ளிட்ட துறைகளின் வளர்ச்சிக்கும், புதுச்சேரி அரசு முன்னுரிமை அளிப்பதாக துணைநிலை ஆளுநர் கூறினார்.

புதுச்சேரி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர், ஆகஸ்ட் 14ஆம் தேதி வரை, 11 அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

விமானங்களின் வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான, **பாரதீய வாயு-யான் விதேயக்** மசோதாவை, மத்திய அமைச்சர் திரு. கே. ராம் மோகன் நாயுடு, இன்று மக்களவையில் தாக்கல் செய்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/SM/VM**